**உரிமை மாற்றம் செய்தல் ( தற்பொழுது சேவையில் உள்ள பஸ்வண்டிகளுக்காக மாத்திரம் புதிய உரிமையாளருக்காக உரிமை மாற்றம் செய்யப்படும் )**

தேவைப்படும் ஆவணங்கள்

I அனுமதிப்பத்திரதாரர் மேல் மாகாண சபைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும் அவ்வாறு இல்லாத பட்சத்தில் விண்ணப்பதாரி மேல் மாகாண சபைக்குள் தற்பொழுது வசிப்பவர் என உரிய கிராம உத்தியோகத்தரிடம் இருந்து பெற்ற சான்றிதழ் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும் அத்தகைய சான்றிதழில் உரிய பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் கட்டாயமாகும்.

II பதிவுச் சான்றிதழ் ஊடாக (மூலப் பிரதி) உரிமையாளர் பெயரில் பஸ்வண்டி பதிவு செய்திருத்தல் வேண்டும் (வேறு ஆவணங்கள் பொறுப்பேற்கப்பட மாட்டாது) இதற்கு மேலதிகமாக நிதி வசதிகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பஸ்வண்டியாயின் உரிய நிதிக் கம்பனியின் மூலம் வழங்கப்பட்ட பதிவு

III பதிவு செய்யப்பட்ட உரிமையாளர் பெயரில் அனைத்து பயணிகள் மற்றும் ஆதனத்துக்காக மூன்றாம் தரப்பு மட்டுப்படுத்தப்படாத காப்புறுதிச் சான்றிதழின் மூலப் பிரதி இருத்தல் வேண்டும்.

IV உரிமப் பத்திரத்தின் மூலப் பிரதி (கடந்த ஆண்டின்)

V வீதி அனுமதிப் பத்திரத்தை சாட்டுவதற்கு இணங்குவதாக 06 மாத காலத்துக்குள் பெறப்பட்ட 50.ஃஸ்ரீ ரூபா முத்திரையை ஒட்டிய சத்தியக் கடதாசியின் மூலப் பிரதி (சமாதான நீதவான் ஒருவரினால் ஒப்பமிட்டு உறுதிப்படுத்தப்பட்ட )

VI சாரதி அனுமதிப்பத்திரம் ( வேறு பஸ்வண்டிக்காக சமர்ப்பிக்கப்படாததும் ஒரு வருடத்துக்கும் மேற்பட்டதுமான பழைமை வாய்ந்த அனுமதிப்பத்திரமாக இருத்தல் வேண்டும்)

VII சாரதி மருத்துவ சான்றிதழ்

VIII நடத்துநர் அனுமதிப்பத்திரம் (மேல் மாகாண மோட்டார் வாகன ஆணையாளரினால் வழங்கப்பட்ட)

IX கோரப்படும் காலப்பகுதிக்கான செல்லுபடியாகும் வாகன தகுதிச் சான்றிதழ்

<u>முக்கியமானது</u>

- அற்றோணி தத்துவத்தின் ஊடாக உரிமை மாற்றம் செய்யப்பட மாடடாது.
- பஸ்வண்டியை தலைமை அலுவலகத்தில் முன்னிலைப்படுத்தல் வேண்டும்
- உரிமை மாற்றத்தின் போது பஸ்வண்டி மற்றும் வீதி அனுமதிப்பத்திரம் புதிய உரிமையாளருக்கு சாட்டும் போது உரிய சத்தியக் கடதாசியில் பழைய உரிமையாளரின் வதிவிடப் பிரதேசத்தின் சமாதான நீதவான் முன்னிலையில் 50.ஃஸ்ரீ ரூபா முத்திரையை ஒட்டி ஒப்பத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் எனவும், குறித்த சத்தியக் கடதாசியின் ஒப்பம் பழைய உரிமையாளரின் ஒப்பம் என பிராந்திய முகாமையாளரினால் உறுதிப்படுத்தி சமர்ப்பித்தல் வேண்டும்
- சமர்ப்பிக்கப்படுகின்ற அனைத்து ஆவணங்களும் உண்மையானதும் சரியானதும் என குறிப்பிடும் சத்தியக் கடதாசி
- உரிமை மாற்றக் கட்டயம் ரூபா 100,000.ஃஸ்ரீ ஆகும்.
- முற்கொடுப்பனவு அட்டையை பயன்படுத்தக் கூடியதான டிக்கட்டை வழங்கக் கூடிய இயந்திரம் இருத்தல் வேண்டும்.

**உரிமையாளர் மரணமடைந்த பின் உரிமையை மாற்றம் செய்தல்**

இலக்கம் 01 இன் கீழ் உள்ள அனைத்து ஆவணங்களுக்கும் மேலதிகமாக பின்வரும் ஆவணங்கள் தேவைப்படும்

I. மனைவி அல்லது கணவர் இருக்கும் பட்சத்தில் அவர் முன்வந்து உரிமை மாற்றத்தைச் செய்து கொள்ளல் வேண்டும்

II. பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்

* மரணமடைந்தவரின் மரணச் சான்றிதழின் மூலப் பிரதி
* திருமணச் சான்றிதழின் மூலப் பிரதி
* கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ் ( வதிவிடம் தொடர்பாகவும் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் காட்டுகின்றதுமான பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட)
* 16 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளின் விருப்பம் தொடர்பில் சமாதான நீதவானினால் உறுதிப்படுத்திய கடிதம்
* ஒரு பிள்ளைக்கு சாட்டும் பட்சத்தில் தாயின் அல்லது தந்தையின் சத்தியக் கடதாசியுடன் மற்றைய பிள்ளைகள் வீதி அனுமதிப் பத்திரத்தை சாட்டுவது தொடர்பில் விருப்பத்தைத் தெரிவிக்கும் சத்தியக் கடதாசி
* அனைத்துப் பிள்ளைகளினதும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களின் மூலப் பிரதிகள்

III பஸ்வண்டியை பிரதான அலுவலகத்தில் முன்னிலைப்படுத்தல் வேண்டும்

**உரிமையாளர் வெளிநாடு சென்றிருக்கும் சந்தர்ப்பத்தில் உரிமை மாற்றம்**

இலக்கம் 2 இன் கீழ் உள்ள அனைத்து ஆவணங்களுக்கும் மேலதிகமாக பின்வரும் ஆவணங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்

I வெளிநாடு சென்றுள்ளதை உறுதிப்படுத்தும் பொருட்டு குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளரிடம் இருந்து பெற்றுக் கொண்ட கடிதம்.

II உரிய நாட்டின் தூதரகத்தின் ஊடாக பதிவு செய்த உரிமையாளரினால் புதிய உரிமையாளருக்கு வழங்கிய உடன்படிக்கைப் பத்திரம்.

III அற்றோணி தத்துவம் வழங்கப்பட்டிருப்பின் அது செல்லுபடியானது என பதிவு செய்யும் திணைக்களத்திடம் இருந்து உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் (சமர்ப்பிக்கும் தினத்துக்கு)

<u>முக்கியமானது</u>

- அற்றோணி தத்துவம் ஊடாக மாத்திரம் உரிமை மாற்றம் செய்யப்பட மாட்டாது.